திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கும், விடுதலை வீரர்கள், தமிழ் காத்தோர் ஆகியோருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகப் பயணம் செய்யும் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

9.10 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கல்வி அமைச்சர் அவர்களிடம் கேட்கவேண்டிய கேள்வி தானா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விடையை இப்போது தரக் கூடிய நிலையில் இல்லை. (குறிக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சா. கணேசன் அவர்களுக்குத் தொடர்ந்து தேவையில்லை. ஏனென்றால், ஏற்கனவே இது சட்டமுன்வடிவில் வந்திருக்கிறது.

வினா எண். 1396 எடுத்துக் கொள்வதற்கு மாறாக, நம்முடைய முன் வரிசையிலுள்ள அமைச்சர்களின் ஒப்புதலோடு, இப்போது வினா எண் 2357 எடுத்துக் கொள்ளப்படுகிறது.

சுற்றுலாத் துறை மூலம் சொகுசுப் பேருந்து.

*2357—திரு. ஏ. செங்குட்டுவன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பூம்புகார் கண்ணகி கோட்டம், தரங்கம்பாடியில் அமைந்துள்ள டேனிஸ் கோட்டை, தேரழுந்தூரில் அமைந்துள்ள கம்பர் கோட்டம் இம் மூன்றையும் இணைக்க சுற்றுலாத்துறை மூலம் சொகுசுப் பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

1990 ஏப்ரல் 20]

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் கண்ணகிக் கோட்டத்தைப் போல கவி சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரழுந்தூரில் கம்பர் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளதை, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் வருகை தந்து பார்வையிட்டார்கள். பூம்புகார் கண்ணகிக் கோட்டத்தைப் பார்வையிட்டு, ஏராளமான சுற்றுலாப் பயணிகள், கம்பர் கோட்டத்தைக் காண வருகிறார்கள். ஆகவே, தேரழுந்தூரை சுற்றுலா மையமாக ஆக்கி, பூம்புகார், தரங்கம்பாடி, தேரழுந்தூர், கும்பகோணம், தஞ்சாவூர், கல்லணை வரையில், சுற்றுலா பேருந்துகள் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புமிக்க உறுப்பினருடைய யோசனையை ஏற்றுக் கொண்டு, தஞ்சாவூரிலிருந்தும், அதேபோல், கும்பகோணத்திலிருந்தும் சில சுற்றுலா வசதிகளைச் செய்ய இருக்கிறோம். ஆகவே, கும்பகோணத்திலிருந்து கம்பர் கோட்டம், பூம்புகார், தரங்கம்பாடி, கல்லணை ஆகிய இடங்களுக்குப் பேருந்துகள் விடுவதற்கு வசதி செய்து தரப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பர் பிறந்த தேரழுந்தூரை, சுற்றுலா மையமாக ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா? அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதை தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அந்தக் கம்பர் கோட்டம் இருக்கின்ற இடத்தைப் பார்த்திருக்கிறேன். ஏராளமான பயணிகள் அங்கே வருகின்ற காரணத்தினால், சுற்றுலா துறையின் மூலமாக 'way side facility' என்று சொல்லப்படுகிறதே அந்த அறைகளோடு, 'ரெஸ்டாரென்ட்' வசதியோடு இருக்கக் கூடிய வசதிகளை—சுற்றுலா வசதிகளை—அங்கே செய்து தருவதற்கு பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

9–15 மணி

திரு. எம். முகமது சித்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா துறையின் மூலமாக, சொகுசு பேருந்துகள் இந்த சுற்றுலா இடங்களுக்கு, தற்போது இந்த இடங்களுக்கு இல்லாவிட்டாலும் கூட, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக, மக்கள் வந்து போகும் வண்ணம், ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு, பூம்புகார் கார்ப்பரேஷன் மூலமாக விடப்படும் கப்பல், கடலூர் வரை விஸ்தரிக்கப்படுவதாக சொல்லப்படுகிறது; அந்தச் சுற்றுலா மையத்திற்கு அந்தக் கப்பல் விடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோள் பரிசீலிக்கப்படும்.

வழிகாட்டிகள் நியமனம்.

*5211—திரு. இரா. சாமிநாதன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை நகருக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் நலனை முன்னிட்டு முகவர் உரிமை பெற்ற வழிகாட்டிகள் நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மதுரை நகருக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு வழிகாட்டுவதற்காக அரசு அங்கீகாரம் பெற்ற வழிகாட்டிகள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 1990-91-ல் 5 வழிகாட்டிகள்—ஒரு இடத்திற்கு 5 வழிகாட்டிகளாக, ஆக மொத்தம் 30 வழிகாட்டிகள் நியமிக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் தமிழ்நாட்டில், அனைத்துக் கோயில்களிலும் பின்பற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு வெளிநாட்டுப் பயணிகள் ஆர்வம் காட்டுகிறார்களோ அங்கே இருக்கின்ற சிற்பக் கலைகளைப் பார்ப்பதற்கு—குறிப்பாக, திருச்சியிலே இருக்கக் கூடிய கோயில்களில், மலைக் கோயில்கள் இருக்கின்றன; அங்கே இருக்கக்கூடிய சிற்பக் கலைகளில் ஆர்வம் காட்டுகிறார்கள்: அதைப் போன்ற இடங்களிலே வழிக்காட்டிகள் நியமிக்கப்படுவார்கள்.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் வழங்கி இருக்கின்ற முகவர் உரிமை பெற்று வழிகாட்டியாக இருக்கக் கூடியவர்களுக்கு ஏதும் படிப்புத் தகுதி வரையறுக்கப்பட்டிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.